Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

## 2016 Public Examination

# Tamil

## Continuers Level

**Wednesday 19 October: 2 pm Australian Eastern Daylight Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 30 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2016

**Part A** (Questions 1–3)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space.

**Text 1**

1. You are aware that your Uncle Kethees is considering getting insurance from Nimmathi. Write the message you would send to your uncle after hearing this news. **3**

**Marks**

You may make notes in this space.

**Text 2**

2. Does this king govern well? Give **five** reasons to justify your response. **5**

Marks

You may make notes in this space.

**Text 3**

3. (a) What can be inferred about the purpose of Pamini's visit? **3**

(b) What are the requirements for entering this competition? **4**

**Part B** (Questions 4–6)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

---

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings of each text. You may make notes at any time.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks** | You may make notes in this space.

**Text 4**

4. Why is this great news for Geetha? **4**
இந்தச் செய்தி கீதாவுக்கு ஏன் சிறந்த ஒரு செய்தியாக உள்ளது?

Marks | You may make notes in this space.

**Text 5**

5. (a) What is the state of mind of the principal? **2**

அதிபரின் மனநிலை எவ்வாறு இருக்கிறது?

(b) Provide **three** reasons for the principal's state of mind. **3**

அதிபரின் இந்த மனநிலைக்கான காரணங்கள் மூன்று தருக.

| Marks | You may make notes in this space. |
|---|---|

**Text 6**

6. (a) Why is this event being held? **4**

இந்த நிகழ்வு ஏன் நடத்தப்பெறுகிறது?

(b) Apart from parents contacting their children, what obstacles may there be to achieving the aims of the event? **2**

பெற்றோர்கள் பிள்ளைகளுடன் தொடர்பு கொள்வதைத் தவிர, இந்த நிகழ்விலிருந்து உச்சப் பயன் பெறுவதில் வேறு என்ன தடைகள் ஏற்படலாம்?

**End of Section 1**

BLANK PAGE

| Student/Registration Number | | | | | | | | | | | | Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |

**2016 Public Examination**

# Tamil

## Continuers Level

### Section 2: Reading and Responding (25 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 10 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in black or blue pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2016

**Part A** (Questions 7–8)
(10 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *understand general and specific aspects of texts (for example, by comparing, contrasting, summarising and/or evaluating) and convey the information appropriately.*

---

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

கதை

நெல்லாவிலில் மிகஆடம்பரமான ஒரு திருவிழா நடைபெற்றது. அயலூர்களில் இருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்தனர். தலைகாட்டி என்ற கிராமத்தில் இருந்தும் மக்கள் கூட்டம் ஒன்று புறப்பட்டது. இளையோர், பெரியோர், சிறுவர்கள் என, பலர் அதில் அடங்கியிருந்தனர். அனைவருமே மிக விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்களை அணிந்திருந்தனர். சிறுவர்கள்கூட மோதிரங்கள் சங்கிலிகள் என்பவற்றை அணிந்திருந்தனர்.

தலைகாட்டியில் இருந்து நெல்லாவில் செல்வதற்கு அடர்ந்த காட்டுப் பாதையொன்றை அவர்கள் கடந்துகொண்டிருந்தபோது, திடீரென்று குதிரைகளில் வந்த கொள்ளையர் கூட்டம் அவர்களை வழிமறித்தது. அனைவரும் பயந்து நடுங்கினர். கொள்ளையர் தலைவனது கடுங்கட்டளைப்படி அனைவரும் தாம் அணிந்திருந்த நகைகளையும் தாம் வைத்திருந்த பொற்காசுகளையும் கொள்ளையர்களிடம் கையளித்தனர். தலைவன், அவர்கள் மேலும் ஏதாவதை மறைத்து வைத்திருக்கிறார்களா என்று சோதனை செய்யும்படி உத்தரவிட்டான். புதிதாக எதுவும் அகப்படவில்லை. கொள்ளையர் தலைவன், ‘வேறுயாரிடமாவது ஏதாவது இருக்கிறதா உண்மையைச் சொல்லிவிடுங்கள்’ என்று சொன்னான். விரக்தி கொண்ட மக்கள் ‘எங்களிடம் இருந்தவை எல்லாவற்றையுமே பறித்துக்கொண்டீர்கள் எம்மிடம் வேறெதுவும் இல்லை’ என்று வெறுப்புடன் கூறினர்.

அடுத்துக் கொள்ளையர்கள் தாம் கொள்ளையடித்த பொருட்களுடன் குதிரைகளில் ஏறிப் புறப்பட ஆயத்தமானார்கள். அப்போது யாத்திரிகர் கூட்டத்திலிருந்த கணேசன் என்ற சிறுவன், கொள்ளையர் தலைவனை நோக்கி ‘ஐயா கொஞ்சம் நில்லுங்கள்’ என்றான்.

கடிவாளக்கயிற்றை இழுத்துப் பிடித்தபடி அத்தலைவன் சிறுவனைப் பார்த்தான்.

சிறுவன் ‘ஐயா என்னிடம் நான்கு பொற்காசுகள் இருக்கின்றன’ என்று கூறினான். ‘உன்னிடமா’ என்று வியப்புடன் கேட்டபடி தலைவன் குதிரையிலிருந்து இறங்கிச் சென்று அவற்றைப் பறித்தெடுத்துக்கொண்டு ‘சிறுவனே உனக்கு இவ்வளவு தங்கக்காசுகள் எப்படிக் கிடைத்தன?’ என்று கேட்டான்.

‘அம்மா தந்தார். திருவிழாவில் நல்ல புத்தகங்கள், என்னிடம் இல்லாத விளையாட்டுப்பொருட்கள், நல்ல தின்பண்டங்கள் ஏதாவது இருந்தால் வாங்கும்படியும், ஒருபகுதியை இரப்பவர்களுக்குக் கொடுக்கவுஞ் சொல்லித் தந்தார்’ என்றான் கணேசன்.

இதைக்கேட்ட தலைவன், ‘சரி, இதை என்னிடம் சொல்லாமல் இருந்திருந்தால் இப்பணம் உன்னிடமே இருந்திருக்கும் அல்லவா? ஏன் என்னை அழைத்துச் சொன்னாய்?’ என்று கேட்டான்.

‘ஐயா யாரிடமாவது ஏதாவது இருக்கிறதா உண்மையைச் சொல்லிவிடுங்கள் என்று நீங்கள் சொன்னபடியால் தான் கூப்பிட்டுச் சொன்னேன்’ என்றான். அதைக்கேட்ட கொள்ளையர் தலைவன் பெரிதும் ஆச்சரியம் அடைந்தான்.

‘சிறுவனே எந்தச்சந்தர்ப்பத்திலும் உண்மையே பேசவேண்டும் என்று உனக்குச் சொல்லிக் கொடுத்தது யார்?’ என்று கேட்டான். ‘அதுவும் என் அம்மாதான்’ என்றான் கணேசன்.

சிறிது நேரம் எதுவும்பேசாமல் குனிந்து நின்ற தலைவன், கண்ணீர் வடிந்த முகத்துடன் நிமிர்ந்து கணேசனின் காலைத்தொட்டு வணங்கினான். ‘குழந்தை வடிவில் வந்து என்னைத்திருத்திய தெய்வம் நீ’ என்று கூறிய அவன், இன்று முதல் தானும் தனது கூட்டத்தாரும் உழைத்து வாழப்போவதாகக் கூறி, சிறுவனினதும் ஏனையோரினதும் பொருட்கள் அனைத்தையும் திரும்பக் கொடுத்துவிட்டுத் தன்கூட்டத்தாருடன் அவ்விடத்தை விட்டுச் சென்றான்.

QUESTIONS

**Marks**

(a) Describe how the Nellavil Festival is celebrated. **4**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(b) What might the robbery leader have been thinking when he was speaking to the boy? Use information from the text to support your response. **2**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

8. Read the text and then answer in ENGLISH the question that follows.

பாடல்கள்

தமிழ்நாட்டிலே காலத்துக்குக் காலம் பெரும்புலவர்கள் தோன்றி, பல செய்யுள் இலக்கியங்களை இயற்றினார்கள். இப்பாடல்கள் குறள், வெண்பா, அகவல், வஞ்சி, கலி எனப் பல வகையாகவும் பல்லாயிரக்கணக்கிலும் உள்ளன. இவை கற்றறிந்த புலவர்களான கம்பர், வள்ளுவர் முதலியவர்களால் அவற்றுக்குரிய இலக்கண முறைப்படி இயற்றப்பெற்று ஓர் எழுத்துக்கூடத் தவறில்லாமல் எழுதப்பெற்றும் பின்னர் அச்சிடப்பெற்றும் இருக்கின்றன. இவற்றின் உட்பொருளை அறிந்து இரசித்து இன்புறுவதற்கு உயர்வான இலக்கண இலக்கிய அறிவு தேவை.

இவை தவிர, படிப்பறிவில்லாத பாமர மக்கள் மிக நீண்ட காலமாக, தாம் தமது அன்றாட வேலைகளைச் செய்யும்போது பல பாடல்களைப் பாடிவந்தார்கள். குறிப்பாக, வயலில் வேலை செய்யும்போதும் கடலில் வலை இழுக்கும்போதும், பிள்ளைகளைத் தாலாட்டும்போதும் பாடல்களை இசைத்தார்கள். இசையையே முதன்மைப் படுத்தி, தமது சூழலில் வழங்கிய சொற்களைக் கொண்டு, உணர்வுகளை வெளிப்படுத்தி, இனிமையாகப் பாடப்பெற்ற பாடல்கள் இவை. ஒரே பாடலிலேயே வசதிக்கும் சூழலுக்கும் ஏற்பச் சொற்களைப் புகுத்தியும் மாற்றியும் பாடியிருக்கிறார்கள்.

இவற்றுக்கு இலக்கண விதிகள் எதுவும் இல்லாததோடு ‘இயற்றியவர்’ என்றும் எவரும் இல்லை. எழுத்துவடிவமும் இருந்திருக்கவில்லை. இவை வயற்பாட்டு, வலைப்பாட்டு, தாலாட்டுப்பாட்டு, கும்மிப்பாட்டு, ஒப்பாரி முதலிய வகைகளாக வாய்மொழி இலக்கியம் என்ற பெயரில் தற்காலத்தில் நூல்களாகத் தொகுக்கப்பெற்றுள்ளன.

QUESTION

**Marks**

Using only information from the text, compare oral forms of literature with written forms of literature. **4**

**Part B** (Question 9)
(15 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *demonstrate an understanding of the stimulus text*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

9. Read the text and then answer the question in approximately 150 words in TAMIL on page 7.

## முறைப்பாடுகள்

உமது உள்ளூராட்சிப் பகுதிக்குட்பட்ட மிகப்பிரபலமான இளைஞர் விளையாட்டுக்கழகத் தலைவர் கழகத்தின் நிதிக்குழுவினருக்குத் தெரிவித்த முறைப்பாடுகள் இவையாகும்.

எமது விளையாட்டு மைதானம் மழைக்கால முடிவில் மேடும்பள்ளமுமாக இருப்பதால் பயன்படுத்துவதற்குச் சிரமமாக உள்ளது. பெற்றோர் ஒருவர் வெப்ப காலத்தில் வெட்டுவதைத் தவிர, வருடத்தில் பெரும்பான்மையான காலம் புல் வெட்டப்படுவதில்லை. பராமரிப்பில்லாத நிலையால் விளையாட்டு வீரர்கள் காயத்துக்குள்ளாகிறார்கள்.

நமது விளையாட்டுக்கள் முடிவடைந்து நாம் இப்பகுதியை விட்டுச் சென்ற பின்னர், குறிப்பாக இரவில், மைதானத்தின் வட்டமான வேலியைச் சுற்றிச்சுற்றிச் சிலர் தமது வாகனங்களை ஓட்டி மைதானத்தைச்சூழவுள்ள பகுதியைச் சேறாடுகின்றனர். வாகனங்கள் சென்ற பாதைகள் பெரிய வாய்க்கால்களாகிவிடுகின்றன. பார்ப்பதற்கு அலங்கோலமாக இருக்கிறது.

எமது கூட்டங்களை நாம் ஏன் வேறு இடங்களில் கூட்ட வேண்டும்? மைதானத்தில் உள்ள குடிநீர் வசதிக்கும் மலசலகூடக் கட்டிடத்துக்கும் இடையில் உள்ள பகுதியில், பார்வையாளருக்கான இருக்கை வசதிகளோடு கூடிய கட்டடம் ஒன்றை ஏன் எமக்கென்று அமைக்கப்பெறக்கூடாது? நாம் நமது கூட்டங்களையும் வெற்றிக் கொண்டாட்டங்களையும் நடத்த வசதியாக இருக்குமல்லவா?

எமது இளைஞர் விளையாட்டுக்கழகத்தில் நல்ல குடிநீர் வசதி இருக்கிறதே தவிர, மைதானத்தைப் பேணவோ, புற்களைக் காயாமல் வைத்திருக்கவோ நீர் வசதி கிடையாது. இதனால் மழை இல்லாத காலங்களில் நிலம் வரண்டு வெடித்து விடுவதாலும், புற்கள் இறந்துபோவதாலும் மைதானம் பல மாதங்களுக்குக்கூடப் பயன்படாது போய்விடுகிறது. நிலம் ஒரேமட்டமாக இல்லாமல் காய்ந்து விடுவதனால் விளையாடுவோர் காயத்துக்கும் உள்ளாகிறார்கள்.

உள்ளூராட்சிமன்றம் எமது கழகத்திற்கு ஒதுக்கியுள்ள நிதியில் ஒரு பகுதியை இத்திருத்த வேலைகளுக்குப் பயன்படுத்தலாமே.

QUESTION

As secretary of the finance committee of the sports club, write a letter in response to the complaints made by the president of the club, indicating which of these problems can be rectified now, and also explaining that it will not be possible to find a solution to all the problems at this stage.

இந்த விளையாட்டுக்கழகத்தின் நிதிக்குழுச்செயலாளர் என்றவகையில், இம்முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, கழகத் தேவைகள் சிலவற்றையே பூர்த்திசெய்ய இயலும் என்பதையும், குறைபாடுகள் எல்லாவற்றையும் இச்சமயத்தில் சீர்திருத்த முடியாது என்பதையும் விளக்கி, விளையாட்டுக்குழுத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக.

*Do not remove this page from the question booklet.*

Student/Registration Number

Centre Number

Tamil
Continuers Level

Question 9



PLEASE TURN OVER

**End of Section 2**

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

# 2016 Public Examination

# Tamil
## Continuers Level

### Section 3: Writing in Tamil (20 marks)

**Instructions to Students**

1. Allow approximately 40 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in black or blue pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

© Victorian Curriculum and Assessment Authority 2016

**Section 3** (Questions 10–12)
(20 marks)

---

*Your response will be assessed on how well you:*

- *demonstrate depth of treatment of information, ideas and/or opinions*
- *write text appropriate and relevant to context, purpose and audience*
- *structure and sequence information and ideas*
- *manipulate language structures and vocabulary in Tamil.*

---

Answer ONE question from this section in approximately 250 words in TAMIL.

10. Write an article for *TamilWeb* magazine, evaluating the statement, ‘As social media develops rapidly along with the growth of science, Tamil culture and traditions are losing their uniqueness and dying’.

    ‘சமூகத்தொடர்புசாதனங்கள் விஞ்ஞானவளர்ச்சியுடன் வேகமாக முன்னேறிவருவதனால், தமிழர் பண்பாடும் பழக்கவழக்கங்களும் தமது தனித்துவத்தை இழந்து அழிந்து போகின்றன’ இக்கூற்றை மதிப்பீடுசெய்து ‘இணையத்தமிழ்’ சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக.

11. Write a persuasive script of a speech that you plan to give at a meeting that will be attended by many women on International Women’s Day in a Tamil-speaking country. The title is ‘Australia is far ahead of Tamil-speaking countries on the issue of women’s rights’. Include supporting information.

    ‘பெண்களுக்கான உரிமைகள் என்ற விடயத்தில் ஒஸ்ரேலியா தமிழ் பேசும் நாடுகளைவிடப் பலபடிகள் முன்னேறிய நிலையில் உள்ளது.’ இந்தத் தலைப்பில் தகவல்களைத் தெரிவித்து, தமிழ்பேசும் நாடொன்றில், சர்வதேசப் பெண்கள் தினத்தில், இளம்பெண்கள் பலர் கலந்துகொள்ளவுள்ள கூட்டத்தில், அவர்களைத் தூண்டும் வகையில் நீர் ஆற்றவுள்ள உரையை எழுதுக.

12. Write an imaginative story for teenagers beginning with the words, ‘The bicycle the boy was riding suddenly changed into a spaceship …’

    ‘சிறுவன் ஒருவன் ஓட்டிக்கொண்டிருந்த துவிச்சக்கரவண்டி, திடீரென்று ஒரு விண்கலமாக மாறிவிட்டது...’ இந்த வாக்கியத்துடன் தொடங்கும் கற்பனைக் கதையை, பதின்மவயதினருக்காக எழுதுக.

You may make notes in this space.

Question Number:

PLEASE TURN OVER

**End of Section 3**